# CENTRE FOR MONITORING ELECTION VIOLENCE
මැතිවරණ ප්‍රචණ්ඩත්‍රියා නිරීක්ෂණ මධ්‍යස්ථානය
தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம்
No 6/5, Layards Road, Colombo 05, **Tel:** +094-11 3010664
**Fax**: +094-11 2505228 **E-mail**: cmev@cpalanka.org **Web**: www.cmev.org


## உள்ளூர் அதிகார சபைத் தேர்தல்கள்- 2018

## தேர்தல் தின அறிக்கை - இல 01

2018 ஆம் ஆண்டு உள்ளூர் அதிகார சபைகளுக்கானத் தேர்தல்கள் இன்று காலை 7.00 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. நாட்டின் பெரும்பாலான பிரதேசங்களில், வாக்களிப்புச் செயற்பாடுகள் எவ்வித இடையூறும் இன்றி சுமூகமான முறையில் இடம்பெற்று வருவதாக 2018 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் காலை 10.00 மணியளவில், தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையத்திற்கு அறிக்கையிடப்பட்டுள்ளது.

இன்று காலை 10.00 மணியளவில், தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையமானது 39 சம்பவங்களை பதிவு செய்துள்ளது. இவற்றுள் 04 சம்பவங்கள் பாரதூரமான சம்பவங்களாகவும், 39 சம்பவங்கள் சிறிய சம்பவங்களாகவும் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

வாக்களிப்பு நிலையங்களுக்கு அருகில் இடம்பெறுகின்ற தாக்குதல்கள் மற்றும் அச்சுறுத்தல்கள் தொடர்பான சில முறைப்பாடுகளை தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் பெற்றுக் கொண்டுள்ளது. கிழக்கு மாகாணத்தில் ஐக்கிய தேசிய கட்சி சார்பாகப் போட்டியிடுகின்ற ஏ.எம் றக்கீப் என்பவரும் அவருடைய ஆதரவாளர்களும், காலை 8.30 மணியளவில் ஏனைய அரசியற் கட்சிகளின் ஆதரவாளர்களைத் தாக்கியுள்ளதாக தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையத்திற்கு முறைப்பாடொன்று கிடைக்கப்பட்டுள்ளது. இத் தாக்குதல் சம்பவமானது அம்பாறை மாவட்டம், கல்முனை மாநகர சபைக்குட்பட்ட பெரிய நீலாவனை வட்டாரத்திற்கான, புலபர்மணி ஷெர்புதீன் மகா வித்தியாலயத்தில் அமைக்கப்பட்டுள்ள வாக்களிப்பு நிலையத்தில் இடம்பெற்றுள்ளது.

முன்னாள் கிழக்கு மாகாண முதலமைச்சர் நஸீர் அஹமட்டின் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவர் அல்-ஜிப்ரியா வாக்களிப்பு நிலையத்திற்கு அருகில் உள்ள மக்களை அச்சுறுத்தியுள்ளார்.

மேல் மாகாணத்தைப் பொறுத்தவரையில், ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளரொருவரான றொய்ஸ் பர்னான்டோ என்பவர் ஐக்கிய தேசிய சுதந்திர கூட்டமைப்பினைச் சேர்ந்த வேட்பாளர் ஒருவரை வார்த்தைகளினால் தாக்கியுள்ளதுடன் மரண அச்சுறுத்தலும் விடுத்துள்ளார். இச்சம்பவம் நீர்கொழும்பு மாநகர சபைக்குட்பட்ட பிரதேசத்தில் காலை 7.05 மணியளவில் இடம்பெற்றுள்ளது. ஹல்லொலுவ வட்டாரத்தில், ஹல்லொலுவ நவோதய மகா வித்தியாலய வாக்களிப்பு நிலையத்திலுள்ள 4 வாக்குச் சாவடிகளும் வாக்களிப்பின் இரகசியத்தன்மையினை மலுங்கடிக்கும் வகையில் காணப்பட்டதாக தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையத்தின் கண்டி மாவட்ட ஒருங்கிணைப்பாளர் அறிவித்துள்ளார்.

அனைத்து மாகாணங்களில் இருந்தும் இதுவரைப் பெற்றுக்கொள்ளப்பட்ட பெரும்பாலான முறைப்பாடுகள் பிரச்சாரம் செய்தல், வாக்காளர்களை முறையற்ற செல்வாக்கிற்கு உட்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுதல், பிரச்சார ஆவணங்களை விநியோகித்தல் மற்றும் காட்சிப்படுத்தல் ஆகியன தொடர்பிலேயே கிடைக்கப்பெற்றுள்ளன. கட்சியின் சின்னங்களை சிறிய காகிதங்களில் அச்சடித்து அவற்றிற்கு முன்னால் புள்ளடியிட்டு (X), அவற்றை வாக்களிப்பு நிலையங்களுக்கு அருகில் காட்சிப்படுத்தல் அல்லது வாக்களிப்பு நிலையங்களுக்கு அருகிலுள்ள நிலத்தில் போடுதல் ஆகிய சம்பவங்கள் இவற்றுள் உள்ளடங்குகின்றன.

கம்பஹா மாவட்டம், வத்தளை பிரதேச சபைக்குட்பட்ட ஹுனுப்பிட்டிய பண்டாரநாயக்க ஆரம்பப் பாடசாலையிலுள்ள வாக்களிப்பு நிலையத்திலிருந்து 100 மீற்றர் தொலைவில் ஒரு மோட்டார் கார் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. இம் மோட்டார் காரில் ஐக்கிய தேசியக் கட்சியின் சின்னத்தினையுடைய ஸ்டிக்கர்கள் ஒட்டப்பட்டிருந்ததுடன், ஐக்கிய தேசியக் கட்சிக்கு புள்ளடி(X) இடப்பட்டிருந்தது. இவ் வாகனம் ஒரு அல்டோ கார் என்துடன் இவ் வாகனத்தின் உரிமத் தகடு இலக்கம் CMA 4179 ஆகும்.

காலை 9.00 மணியளவில் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் வேட்பாளர்கள் கம்பஹா மாவட்டத்திலுள்ள தொம்பே பிரதேசத்தில் வாக்குகளுக்காகப் பிரச்சாரங்களை மேற்கொண்டிருந்தார்கள்.

மீதொட்டமுல்ல மாநகர சபைக்கான ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர் குணசில சில்வா இன்று காலை வாக்குகளுக்காகப் பிரச்சாரங்களை மேற்கொண்டிருந்தார்.

பலகல பிரதே சபைக்கான ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர் சுரங்க ரத்னாயக்க, அநுராதபுரம் மாவட்டம், ஹல்மில்லவிலுள்ள தெலதின்ன வேவா என்ற இடத்திலிருந்து 10 மீற்றர் தொலைவிலுள்ள இடத்தில், துண்டுபிரசுரங்களை விநியோகித்து ஐக்கிய தேசிய கட்சிக்கு வாக்களிக்குமாறு கோரியிருந்தார்.

மொனராகலை பிரதேச சபைக்கான ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர் அஜித் மற்றும் அவருடைய ஆதரவாளர்கள், சுபாக்யா வித்தியாலயத்திலுள்ள வாக்களிப்பு நிலையத்தில் அங்குமிங்கும் நடமாடுவதுடன் குறிப்பிட்ட வேட்பாளருக்கு வாக்களிக்கும்படி வாக்காளர்களை அழுத்தத்திற்கு உட்படுத்தியிருந்தனர். மேலும், இதே பிரதேச சபை பகுதியில் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் வேட்பாளரான சிரியலதாவின் கணவர் விபுலானந்தா தமிழ் வித்தியாலய வாக்களிப்பு நிலையத்தின் வாக்காளர்களுக்கு அழுத்தம் கொடுப்பதற்கு முயற்சித்திருந்தார்.

பொத்துவில் பிரதேச சபையினைச் சேர்ந்த ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர் கே. செக்கச்சனார் மற்றும் அவருடைய ஆதரவாளர்கள், சரூல் ப(f)ல்லா வித்தியாலய வாக்களிப்பு நிலையத்தின் வாக்காளர்களிடம் ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களிக்குமாறு கோரியிருந்தனர்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் ஆதரவாளர்கள் ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களிக்குமாறு கூறி வாக்களர்களுக்கு அழுத்தம் தெரிவித்திருந்தனர். இச்சம்பவம் பொத்துவில் பிரதேச சபை பிரதேசத்திற்குட்பட்ட மதுரஞ்சேனை வட்டாரத்தின் சரூல் ப(f)ல்லா வித்தியாலய வாக்களிப்பு நிலையத்திற்கு செல்லும் வழியில் இடம்பெற்றுள்ளது.

இரத்தினபுரி மாவட்டம், எம்பிலிபிடிய பிரதேச சபைக்குட்பட்ட கொலன்னா/ லியனபொட வட்டாரங்களுக்கான பல வாக்களிப்பு நிலையங்களில், ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின்

வேட்பாளர்கள் வாக்காளர்களை அச்சுறுத்தியதாகவும், அழுத்தத்தற்கு உட்படுத்தியதாகவும் தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையத்தின் கண்காணிப்பாளர்கள் அறிக்கையிட்டுள்ளனர். ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் வேட்பாளர் ஜயவீர மாதர ஆராச்சி இங்கினிகஹாகொட வித்தியாலயம், முலந்தியவா மகா வித்தியாலயம் மற்றும் பருத்தகந்த சமூக மண்டபத்திலுள்ள வாக்களிப்பு நிலையங்களுக்கு அருகிலும், ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் வேட்பாளர் இந்துநில் இராஜபக்ஷ, தொரபன, கட்டபன மற்றும் பிமால்பே வாக்களிப்பு நிலையங்களுக்கு அருகிலும் காணப்பட்டனர்.

காலை 8.30 மணியளவில், ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர் எம்.என்.எம். ரிபா(f)ஸ், புத்தளம் மாவட்டடத்திலுள்ள இரத்மல் யாயா கஸீம் நகர வித்தியாலய வாக்களிப்பு நிலையத்திற்கு அருகில் துண்டு பிரசுரங்களை விநியோகிப்பதனையும் பிரச்சார நடவடிக்கைகளை மேற்கொள்வதனையும், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் வேட்பாளர் பா(f)த்திம் என்பவர் அவதானித்துள்ளார். இதனைத் தொடர்ந்து ரிபா(f)ஸ், பா(f)த்திமை அச்சுறுத்தியுள்ளதுடன் பொலிஸாரும் ரிபா(f)ஸிற்கு ஆதரவு வழங்குவதனை அவதானிக்க கூடியதாக இருந்தது.

குருனாகலை மாவட்டத்திலுள்ள பன்னாலை பிரதேச சபைக்கான ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளரான பியால் அசோக்க ரணசிங்க 158 பெண்களுக்கு தானம் வழங்கும் நிகழ்வொன்றை ஒழுங்குபடுத்தியுள்ளார். இது தொடர்பாக பொலிஸாருக்கு அறிக்கையிடப்பட்டதனைத் தொடர்ந்து இந்நிகழ்வு தடுத்து நிறுத்தப்பட்டது.

**தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையத்தின் கண்காணிப்பு**

தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையமானது, அண்ணளவாக 2000 கண்காணிப்பாளர்களை (நிலையான கண்காணிப்பாளர்கள் உள்ளடங்கலாக) களத்தில் மற்றும் வாக்களிப்பு நிலையங்களில் இடம்பெறுகின்ற வன்முறைச் சம்பவங்களைக் கண்காணிப்பதற்காக ஈடுபடுத்தியுள்ளது. மேலும், தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையமானது நாட்டின் தெரிவு செய்யப்பட்ட சில பகுதிகளுக்கு 90 நடமாடும் குழுக்களை கண்காணிப்பிற்காக அனுப்பியுள்ளது.

தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையமானது 1997 ஆம் ஆண்டு மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் (CPA), சுதந்திர ஊடக இயக்கம் (FMM) மற்றும் அரசியல் வன்முறைகளுக்கு எதிரான கூட்டணி ஆகியவற்றின் ஒன்றிணைப்பில், தேர்தல் தொடர்பான வன்முறைச் சம்பவங்களைக் கண்காணிப்பதற்கான, சுயாதீனமான மற்றும் கட்சி சார்பற்ற ஒரு அமைப்பாக ஸ்தாபிக்கப்பட்டது. தற்போது தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையமானது மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் (CPA), சுதந்திர ஊடக இயக்கம் (FMM) மற்றும் மனித உரிமைகள் ஆவண நிலையம் (INFORM) ஆகியவற்றின் ஒன்றிணைவாக செயற்படுகின்றது.

தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையத்தின் அனைத்து அறிக்கைகளையும் www. cmev.org என்ற வலைத்தளத்தினூடாக அணுகுவதற்கு இயலும்.